431

கிராமோதய வெளியீடு - 2

- ★ உலக சமாதானத்தைக் காக்க
- ★ உலகில் சுரண்டலற்ற சர்வோதய சமுதாயத்தை இரண்டாண்டுகளில் தோற்றுவிக்க
- ★ பூமிதான யக்ஞத்தைத் தீவிரப்படுத்த

எல்லோரும் வாரீர்

வெளியிட்டோர்:

மிழ் நாடு, காந்திநகர், திருப்பூர்.

(விலை அரையணு)

Y2
N55
183318

எல்லோரும் வாரீர்

[பூரி சர்வோதய சம்மேளனத்தில் 27–3–'55 அன்று மாலைப் பிரார்த்தனைக்குப்பின் பூஜ்ய விநோபா பாவே செய்த சொற்பொழிவு.]

இப்பொழுது இந்த (பூரி) சம்மேளனம்முடிவடைகிறது. இன்றும், நேற்றும், நேற்றைக்கு முன்தினமும் அநேக விவாதங்கள் நடைபெற்றன. அநேக கேள்விகள் தோன்றியுள்ளன. அநேக சந்தேகங்கள் என்னிடம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்த எல்லாக் கேள்விகளைப் பற்றியும், சந்தேகங்களைப்பற்றியும் பேசுவதற்கு எனக்கு உள்ளுணர்வு ஏற்படவில்லை. யாத்திரைப் பிரசங்கங்களில் அவ்வப்பொழுது அவைகளுக்கு பதில் கிடைக்கக் கூடும்.

அதிகார சக்தியின் தோற்றம்

இன்று சர்வ சேவா சங்கம் தேசத்திற்கு வேண்டுகோள் விடுத்து நிறைவேற்றியுள்ள முக்கிய தீர்மானத்தை மனதில் கொண்டு அதில் நமது கடமையைப்பற்றி யோசிப்போமாக. அத்திசையில் எனது சிந்தனைகளையும் கருத்துக்களையும் உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். நமது இந்த மனித சமுதாயம் எப்பொழுதிருந்து நிலைபெற்றிருக்கிறதென்று ஒருவருக்கும் தெரியாத அக்காலத்திலிருந்தே சமுதாயத்தில் அன்பு செலுத்துவதும் சண்டையிடுவதும் இருந்தே வந்தது. மனித சமுதாயம் ஆரம்பித்த காலம் என்று கருதப்படும் பண்டைய நாட்களிலேயே மனம்போன போக்கில் ஹிம்ஸை நடைபெற்று வந்தது. அதை எதிர்ப்பதற்கும், தடுப்பதற்கும் அதே ஹிம்ஸை மனம்போன போக்கில் வரையறையின்றி கையாளப்பட்டு வந்தது.. இதன்

மூலம் சமுதாயத்தின் நிலைமை ஓரளவு பாதிக்கப்பட்டும் சிறிது முன்னேறியும் வந்தது. இறுதியாக மனம்போன போக்கில் நடைபெறும் ஹிம்ஸைக்கு பதிலாக ஹிம்ஸையை ஒரு ஒழுங்கு படுத்தி விடுவோமானல் ஹிம்ஸையின் விளைவுகளைக் கட்டுப்படுத்தலாம் என்று ஒரு யோசனை தோன்றியது. அதன் பயனுக நாம் எதை அரசாட்சி என்றும், அதிகார சக்தி என்றும் சொல்கிறேமோ அது ஆரம்பமாயிற்று. ஒழுங்கு படுத்தப்பட்ட ஹிம்ஸை அல்லது தண்ட சக்தி முதன் முதலாகத் தலையெடுத்தது. அது மனம்போன போக்கில் நடைபெற்ற ஹிம்ஸையைத் தடுத்தது. சில நாட்கள் வரை ஒரு வரையறையில் அடங்கியிருந்தது; அதனுல் சமூகத்திற்கு லாபகரம் என்றும் கருதப்பட்டது. மனிதன் அதை தர்மத்தின் ஒரு அம்சமாகக் கருதினுன். இதைக் குறிப்பிட்டு சமஸ்கிருதத்தில் ஒரு பழமொழியுமுள்ளது. அக்காலத்திய அறிஞர்கள் தண்டனையையே தர்மம் என்று கருதினுர்கள் என்பது அதன் பொருள்.

ஹிம்ஸையின் கோர சொரூபம்

எனினும் ஆரம்பத்தில் ஒரு எல்லைக்குட்பட்டிருந்த ஹிம்ஸை ஆகிய தண்ட சக்தி அந்த எல்லைக்குள்ளேயே நிற்கவில்லை. சிறிது சிறிதாக அதன் எல்லை விரிந்துகொண்டே சென்றது. ஒரு ஒழுங்குக்குட்பட்டதாகவே அது இருந்தது. அப்படியில்லையெனில் அதை அரசாட்சி என்றே தண்டனை என்றே சொல்லமுடியாது. ஒரு எல்லைக்குட்பட்டிருந்தும் அது பெருகிக்கொண்டே போயிற்று. பெருகிப் பெருகி இன்று பயங்கரமான ஹிம்ஸையின் கோர ரூபமெடுத்திருக்கிறது. ஒழுங்கு படுத்தப்பட்டதும், ஒரு எல்லைக்குட்பட்டதுமான ஹிம்ஸை அல்லது தண்ட சக்தி இன்று பயங்கர ஹிம்ஸையாக மாறிவிட்டது. ஆகையால் இன்று மனிதன் பீதியடைந்திருக்கிறுன். இன்று மனித சமுதாயம் எவ்வளவு பீதியடைந்திருக்கிறதோ அந்த அளவு மனித சரித்திரத்திலேயே எப்

பொழுதும் அடைந்திருக்காது என்று சொல்வதில் எவ்வித பிழையுமில்லை. ஏனெனில் உலகில் இவ்வளவு பரவலான முறையில் மனித சமூகம் பரவியிருந்ததுமில்லை, இவ்வளவு மகத்தான சக்தியை மனிதன் பெற்றிருக்கவுமில்லை. மனிதனுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள பயங்கரமான நிலைக்குச் சமமான நிலை இயற்கைக் காரணங்களினால் கூட என்றும் ஏற்பட்டிருக்க முடியாது.

பயத்திலிருந்து பிறந்த சிந்தனை

முன்பெல்லாம் எற்பட்ட பெரிய பூகம்பம், பிரளயம் முதலியவைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமானால் கூட இன்று மனிதனின் ஹிம்ஸைப் போக்கினால் ஏற்பட்டுள்ள பயம் போன்று இதற்கு முன்பு எப்பொழுதும் மனிதன் அநுபவித்ததாகத் தெறியவில்லை. தற்சமயம் பயத்தினால் பீடிக்கப்பட்டுள்ள மனிதன் சிறிது சிந்திக்கத் தொடங்கியிருக்கிறான். இந்த பயங்கர ஹிம்ஸையின் விளைவுகளை உடைத்தெரிய வேண்டுமென்றும் யோசிக்கத் தொடங்கியிருக்கிறான். அதன் பிறகு ஒரு எல்லைக்குட்பட்ட ஹிம்ஸையை நிலைக்கச் செய்யலாம் என்ற முறையில் முயற்சி நடைபெற்று வருகிறது.

ராஜாஜியின் வேண்டுகோள்

விஞ்ஞானிகளில் சிலர் இந்த அணுசக்தியைத் தடை செய்யவேண்டும் என்று சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள். ராஜாஜியும் அதை தடை செய்யவேண்டும் என்று வெளிப்படையாகவே வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருக்கிறார். இவை மனிதனது ஒரு முயற்சியைத் தெளிவாகக் காட்டுகின்றன. இந்த பயங்கர சக்தியின் கொடூரத்தை அழித்து இடைக்காலத்திலிருந்ததுபோல் ஒரு எல்லைக்குட்பட்ட தண்ட சக்தி என்ற ரூபத்தில் ஹிம்ஸையை வைத்துக் கொள்ளலாம் என்று மனிதன் விரும்புகிறான். ஆனால் முன்னேற்றத்தின் ரீதியைப் பார்க்கும் பொழுது மனோதத்துவத்தை அறிந்தவர்கள் இவ்விஷயத்தைச் சிறிது சிந்திப்பார்களானால் முன்னேற்ற

சக்தி என்ற சக்கரம் ஒருபொழுதும் பின்வாங்குவதில்லை, முன்னேறிக் கொண்டேயிருக்கிறது, அதுவே ஹிம்ஸை ரூபத்தில் இன்று வெளிப்பட்டிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியவரும். ஹிம்ஸை ஒரு எல்லைக்குட்பட்டிருந்து பெருகிக்கொண்டே வந்தது; அது பயங்கர ஹிம்சை உருவத்தில் வெளிப்பட்டிருக்கிறது. அது இனி முன்னேறித்தான் செல்லுமேயல்லாது பின்வாங்க முடியாது.

இரண்டில் ஒன்று நடந்துதான் தீரும்

இயந்திரத்திற்கு இம்மாதிரி பின்னே செல்லும் சக்தி கிடையாது. மனித சமுதாயத்தின் மனப்போக்கு என்ற இயந்திரம் ஒரு தனி மனிதனுல் தடுத்து நிறுத்தப்படக்கூடியதாகவோ பின்னே இழுத்துச் செல்லப்படக்கூடியதாகவோ இருப்பதல்ல. ஏனென்றால் அது மனித வர்க்கத்தின் ஒருமுகமான மனப்போக்கின் இயந்திரமாக ஆகியிருக்கிறது. எந்த வேகத்தில் அது முன்னேறி வந்ததோ அதே வேகத்தில் அது மேலும் முன்னேறத்தான் வேண்டும். பிறகு என்ன ஏற்படும்? ஒன்று அது அஹிம்ஸை உருவில் தன்னை மாற்றிக் கொள்ளவேண்டும், அல்லது இப்பொழுதுள்ளதைவிட பயங்கரமான உருவெடுத்து மனித ஜாதியையே நிர்மூலமாக்கும் காரியம் நடைபெறவேண்டும். இந்த இரண்டில் ஒன்று நடந்துதான் தீரவேண்டும் என்பதைப் புரிந்துகொள்வது அவசியம்.

சிறுசிறு ஹிம்ஸை சக்திகள் தாக்குப்பிடிக்குமா?

ஆகையால் ஹிம்ஸையின் கொடூரத்தன்மையை மட்டும் தடுத்து நிறுத்தச்செய்யும் பீதிவாய்ப்பட்ட மனிதனின் முயற்சி நடைபெறக்கூடி[illegible]தல்ல. இந்த விஷயத்தை மனதில் ஏற்றுக்கொண்டால் மேற்கொண்டு இரண்டுவிதமான காரியங்கள்தான் நடைபெறமுடியும். ஒன்று மனித ஜாதியின் பூரண நாசம்; மற்றது மனிதனது பூரண மனமலர்ச்சிக்கு ஒரு சந்தர்ப்பம். நாம் அஹிம்ஸையை ஏற்றுக்கொள்வோமானல் நம்மிடம் கொஞ்சம் பலம் இருக்கிற

தென்பதை நாம் உணரவேண்டும். மனிதத் தன்மையில் நம்பிக்கையுடையவர்கள் தமது பலத்தைச் சிறிது உணர வேண்டும். இப்பொழுது துப்பாக்கிப் பயிற்சிக் கூடங்கள் பற்றியும், அவைகளை ஆதரித்தும் சில விஷயங்களை ஸ்ரீ தாண்டன் அவர்கள் சொன்னார். அதிலும் கவனிக்க வேண்டிய விஷயம் இருக்கிறது. அதை சிறிதளவு தைரியம் என்று சொல்லுகிறேன். அந்த தைரியத்தை நுணுக்கமாக ஆராய்வோமானால் அது கோழைத்தனமாகக் காட்சியளிக் கிறது. உத்தமமான பயமின்மையாகத் தெரியவில்லை. அது கோழையின் தைரியமாகத் தெரிகிறது. "எனினும் சிறிது துணிச்சல் இருக்கிறது." இம்மாதிரியாக துப்பாக்கிப் பயிற்சிக் கூடங்களை ஆதரிப்பவர்கள் சொல்ல லாம். சரித்திரத்திலும் இம்மாதிரி செய்யப்பட்டிருக்கிறது ஆயினும், இதுபோன்ற சிறு சிறு ஹிம்ஸை சக்திகள் தாக்குப்பிடிக்க முடியுமா என்று சிந்திப்போமானால் சாத்திய மல்ல என்றே தோன்றுகிறது.

சமுதாயத்தை எது ஆளும்?

சமுதாயத்தின் மீது ஏதேனும் ஒரு ஆட்சி நடைபெறு மென்றால் அது மிகக் குரூர ஹிம்ஸை வழிச் செல்வதாய் இருக்கும்; அல்லது அது மறைந்து பூரணமாக அஹிம்ஸை யுருக்கொண்டதாக இருக்கும்.

ஹே! அஹிம்ஸா தேவி எங்களைக் காப்பாற்று

நாம் பழையகாலக் கற்பனைகளை விடுத்து மத்தியகாலத் தில் எந்த குணங்கள் போதுமென்று மக்கள் திருப்தியடைந் தார்களோ அதைக் காட்டிலும் ஒருபடி முன்னேறி தைரி யத்துடன் வேலை செய்யவேண்டும். நம்மிடையே உள்ள ஹிம்ஸைப் போக்கை அகற்றிவிட்டு பூர்ண அஹிம்ஸைக்கு நம்மைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். அதாவது அதி காரமற்ற, ஆட்சியற்ற சமுதாயத்தை அமைப்பதற்காக நாம் முழு மூச்சுடன் ஈடுபடவேண்டும். இதற்காக நமது ஹிரு தயத்தில் புதிய உத்வேகம் ஏற்படவேண்டும், புத்தியும் பக்குவமடையவேண்டும். என்னுடைய இந்த நம்பிக்கை

திடீரென்று இன்று ஏற்பட்டதல்ல, போதிய அனுபவத்தின் மேல் இந்த எண்ணம் ஸ்திரமடைந்துள்ளது. பல வருஷங்களாக இதன் பேரில் எனக்கு நம்பிக்கை இருந்தும் இது நடைபெறக் கொஞ்சம் காலம் பிடிக்கும் என்று எனக்குத் தோன்றி வந்தது. அதிகாரமும் ஆட்சியுமற்ற சமுதாயத்தை அமைப்பதற்கு வெகுகாலம் பிடிக்கும் என்றும் நான் நினைத்துவந்தேன். ஆனால் இந்த கொடூரமான ஹிம்ஸை தோன்றியதிலிருந்து அதிகாரமற்ற ஆட்சி கூடிய சீக்கிரத்தில் ஏற்படக்கூடும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இப்படி எனக்கு ஏற்பட்டுள்ள பூரண நம்பிக்கையை உங்களுக்கு விளக்கி உங்களது மனதை, இதயத்தைத் தொடச்செய்வேனேயானல் நாம் எல்லோரும் பரிசுத்தமானவர்களாகவும், திட சித்தர்களாகவும் ஆகி மனித சமூகத்தில் ஆன்ம ஒளியை நிரப்பி விடுவோம். இம்மாதிரி எனது நம்பிக்கை மிகவும் மகத்தானதாகி விட்டது. அதனுல் அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு ஆகியவைகளைப் பற்றி நினைக்கும்பொழுதெல்லாம் ஒரு தெய்வீகமான உள்ளுணர்வு என்னிடையே தோன்றி சமுதாயத்தை அமைக்கும் பொறுப்பு முழுதும் என் கையில் வந்து சேருகிறதுபோல் தோன்றுகிறது. அது மிகவும் வேகமாக நம்மிடம் வந்து கொண்டிருக்கிறது. “ஹே, அஹிம்ஸா தேவி, நீ வா, வந்து எங்களைக் காப்பாற்றுக” என்று கூவியழைக்கிறது. எனவே இனி நமது வேலை மேற்கொண்டு சுலபமாகிறதா கடினமாகிறதா என்பதைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டும். இந்த வேலை நமக்கு மிகவும் சுலபமாகிறது. காலச்சக்கரம் இதைச் சுலபமாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். அந்த உணர்ச்சியுடன் தைரியம் கொண்டு மேற் செய்யவேண்டிய திட்டங்கள் வகுக்க வேண்டும். ஆட்சியற்ற சமுதாய அமைப்பிற்கு இப்போது முன்னேற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஐந்து கோடி ஏக்கர் பூமி கிடைத்து அதன் மூலம் ஒரு பிரச்னை தீர்க்கப்படுவதைக் காண்போமா அல்லது முடியாதா என்ற சந்தேகத்துடன் நம்மில் சிலர்

இதில் ஈடுபடுவதாக எனக்குத் தோன்றுகிறது. எனக்கு இதில் கிஞ்சித்தும் சந்தேகமே இல்லை. 1957ல் உலகம் பூராவிலும் ஏன் ஆட்சியற்ற சமுதாயம் ஏற்படக்கூடாது என்று எனக்குத் தோன்றுகிறது. இது வெறும் பகற் கனவல்ல. நாம் போதிய தைரியத்துடனும், மிகவும் ஆழ்ந்தும் சிந்திப்போமானல் மனித வர்க்கம் அழிக்கப்படுவதை விரும்பவில்லை என்பது தெரியும். மனிதன் எவ்வளவு முட்டாளாக ஆகியிருந்தபோதிலும் தனது வர்க்கத்தை நாசம் செய்ய முயற்சிக்குமளவுக்கு முட்டாளாகமாட்டான். கடவுள் விருப்பம் என்னவோ நமக்குத் தெரியாது. எனினும் தற்போது நடைபெறும் இந்த விளையாட்டுகளைப் பார்க்கும்பொழுது மனித வர்க்கத்தின் அழிவுக்கு ஒரு திட்டம் வகுப்பதாக ஒன்றும் காணப்படவில்லை.

மனிதனை மனிதன் நாசம் செய்வதைக் கடவுள் விரும்பவில்லை

இதை எப்படி நாம் அறிந்துகொள்ளுகிறோம்? கடவுள் இப்பொழுது பிரளயத்தையோ மனிதனை மனிதன் நாசம் செய்வதையோ விரும்பவில்லை. இது எப்படி நமக்குத் தெரிகிறது? நமது மனத்தில் அத்தகைய உள்ளொளி, எண்ண எழுச்சி தோன்றுவதால்தான் எனக்கு அவ்வாறு தெரிகிறது. அம்மாதிரி இல்லையென்றால் கடவுள் நம்மெல்லோரையும் மூடர்களாக்கியிருப்பார். நாம் இங்கே கூடி அதிகாரமற்ற சமுதாயம், ஆட்சியற்ற சமுதாயம் என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்க மாட்டோம். முன்பு பிரளயம் ஏற்பட்டபொழுது யாதவர்களுக்கு என்ன தோன்றியது? ஒவ்வொருவரும் மது அருந்தி கையில் தடி எடுத்துக்கொண்டு அடித்துக்கொள்ளத் தொடங்கினர். இறுதியில் கடவுளும் 'நான்மட்டும் உங்களை விட்டுப் பிரிந்து எனிருக்க வேண்டும்' என்று சொல்லி தாமும் சண்டையில் கலந்துகொண்டு மறைந்துவிட்டார். எல்லோரும் மடிந்தனர் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் கடவுளின் விருப்பம்

வேருக இருந்தால் அதிகாரமற்ற, ஆட்சியற்ற சமுதாயத்தை அமைக்கும் எண்ணம் எனக்குத் தோன்றுமா? உங்களுக்குத் தோன்றுமா? நாம் இங்கே கூடுவோமா? இதெல்லாம் நடந்திருக்காது."கடவுள் உலகைப் பிரளயத்தில் ஆழ்த்த விரும்புவதாகத் தெரிகிறது. ஆனால் நாம் பிரளயம் ஏற்படுவதைத் தடுத்துவிடுவதெனத் தீர்மானித்திருக்கிறோம். கடவுளின் விருப்பத்திற்கெதிராக நாம் ஒரு வேலையை செய்யப்போகிறோம்" என்று யாரேனும் அகங்காரம் கொள்வார்களாயின் அம்மாதிரி கடவுளின் எண்ணத்திற்கு மாருகச் சென்று அவர்களால் ஒன்றும் சாதிக்கமுடியாது. ஆகையினால் எனக்கும் உங்களுக்கும் இந்த எண்ணம் தோன்றியிருப்பதனால் இந்த சமயத்தில் கடவுள் பிரளயத்தை விரும்பவில்லை என்பதை நாம் நன்ருகப் புரிந்துகொள்ள வேண்டும். அப்படிப் பிரளயம் ஏற்படுவதை விரும்புவாரானால் அவர் அதை வெகு சீக்கிரத்தில் செய்ய விரும்புவார். பலாத்காரம் அதைத் தெளிவாகக் காட்டுகிறது. ஆகையினால் நாம் மிகவும் சிரத்தையுடன் இருக்கவேண்டும் என்று நான் சொல்லுகிறேன். சத்யயுகம் நமக்கு வெகு சமீபத்தில் வந்துகொண்டிருக்கிறது. சத்யயுகம் வந்துகொண்டிருக்கும்பொழுது, கலியுகத்தின் குணாதிசயங்கள் தீவிரமடைகின்றன. கலியுகக்குடம் நிறைந்தபின்னர் சத்யயுகம் வருகிறது. இவ்வளவு பயங்கர ஹிம்ஸை சமுதாயத்தில் பரவியிருப்பதையும் சமூகம் பீதிவாய்ப்பட்டிருப்பதையும் பார்த்து சத்யயுகம் விரைவில் வரவிருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். ஆகவே, என் அன்பார்ந்த சகோதரர்களே! இங்கு இன்று நான் ஒரு தோற்றத்தைக் காண்கிறேன். நான்கு ஆண்டுகளில் எவ்வளவு நிலம் கிடைத்தது என்ற கணக்கைப்பற்றிச் சிந்திக்கிறோம். ஈசனின் எண்ணம் உலகம் முழுவதிலும் வேலை செய்துகொண்டிருக்கிறது. அந்த எண்ணத்திற்கு நாம் ஒரு கருவியாகியுள்ளோம். அந்த எண்ண எழுச்சி நம்மைக்கொண்டு ஏதோ செய்ய விரும்புகிறது என்பதைப் புரிந்துகொண்டு இதைப்பற்றித்தான் நாம் சிந்திக்கவேண்டும்.

சமூகத்தில் வேற்றுமையில்லாத நிலை ஏற்பட வேண்டும்

சரித்திரங்களைப் பார்ப்போமேயானாலும், எல்லா நிகழ்ச்சிகளும் தெய்வச்செயலால் தூண்டப்பட்டே நடைபெற்றிருப்பது தெரிகிறது. ஒரு காலத்தில் ஒரு யுகத்தில் இங்கு புத்தபகவான் இருந்தார். அங்கு கன்ஃபியூஷியஸ் இருந்தார். சில நாட்கள் ஸொராஷ்டிரர் இருந்தார். அதற்குக் கொஞ்சகாலத்திற்குப் பிறகு ஏசு வந்தார் என்பதை நாம் சரித்திரத்தில் காண்கிறோம். அதன் பின்னர் ஐந்நூறு ஆண்டுகளில் ஒரே மத வாதிகளைக் காண்கிறோம். பிறகு ஒரு காலத்தில் ஏற்பட்ட சமுதாய நிலையில் இங்கு வைஷ்ணவர்கள் வந்தனர். 'அந்தமகான் இருந்தார்' என்பது போன்றவைகளைக் காண்கிறோம். எங்கு பார்த்தாலும் ஒவ்வொரு தேசத்திலும் சுயராஜ்யத்தைப்பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். மனித சமூகத்தில்—'சாம்யயோகம்'—வேற்றுமையில்லாத நிலை ஏற்பட வேண்டும், ஏதாவது ஒரு வித சமத்துவம் ஏற்படவேண்டும், சுதந்திரம் வேண்டும் என்ற உள்ளுணர்வு எல்லா தேசங்களிலும் இருந்து வருகிறது. இதன் பொருள் மனிதர்களுக்கு மனவெழுச்சிகள் ஏற்படுகின்றன. அந்த எழுச்சிகளினால் தூண்டப்பெற்று அவர்கள் வேலை செய்கிறார்கள். இப்பொழுது தோன்றியிருப்பதும் இதுவரை தோன்றியுள்ளவற்றைப் போலவே நம்மை கடவுள் தம்முடைய கருவியாக ஆக்கிக்கொள்கிறார் என்று உணரவேண்டும். இந்த உணர்ச்சி நமக்கு ஏற்பட்டால் நாம் பலசாலிகளாகி விடுவோம். உலகத்தையே அழிக்கக்கூடிய மகத்தான சக்தி அணுவில்கூட நிறைந்திருக்கிறது என்பதை அணுகுண்டு சந்தேகமற நிரூபித்திருக்கிறது. மிகச்சிறிய அணுவில் இவ்வளவு சக்தி இருக்குமேயானால் உயிரும் உணர்ச்சியும் உள்ள ஜீவனிடத்தில் எவ்வளவு சக்தியிருக்கவேண்டுமென்று சிந்திக்கவேண்டும்.

பூமிதான இயக்கத்தைக் குறுகிய நோக்குடன் பார்க்கக் கூடாது.

எனவே நாம் பூமிதான இயக்கத்தை மிகக் குறுகிய நோக்குடன் பார்க்கக்கூடாது. அப்படிப் பார்த்தால்

ஏமாற்றமே அடைவோம். உலகத்தில் ஒரு பெரிய நாடகம் நடிக்கப்பட்டு வருகிறது. அதை ஆட்டுவிக்கக்கூடிய சக்தி மறுபடியும் நம் தேசத்திற்கேதான் வாய்த்திருக்கிறது என்று கருதவேண்டும். இதைப் பூர்த்தி செய்வதற்காகத்தான் நமக்குத் தூண்டுதல் ஏற்பட்டிருக்கிறது.

உலகத்தில் சமாதானம் நிலவவேண்டும், அதற்காகப் பாடுபடுபவர்களுக்கு உற்சாகமளிக்கவேண்டும் என்ற மன வெழுச்சி ஏற்பட்டு அதற்காகவே தன்னுல் இயன்றமட்டும் பண்டித நேரு பாடுபட்டு வருகிருர் என்பதை அறிவீர்கள். உலக சமாதானத்திற்காகப் பாடுபடவேண்டும் என்ற எண்ணம் நமது தேசத்திலிருந்துதான் தோன்றியிருக்கிறது என்பதை நீங்கள் அறியவேண்டும். பூமிதானத்தைப்பற்றிய கருத்துக்களும் இந்தியாவிலிருந்துதான் கிளம்பியிருக்கின்றன. சுதந்திரம் அடைவதற்கான ஒரு புதிய வழியையும் நமது இந்தியாதான் உலகிற்குச் செய்து காட்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் ஒருமிக்கப் பார்க்கும்போது உலகத்தில் ஒரு சக்தி வேலை செய்துகொண்டிருக்கிறதென்றும் அந்த சக்திக்கு இந்தியாதான் காரணமாக இருக்கப் போகிறது என்பதும் தெரியவரும்.

இப்பரந்த மனப்பான்மை நமக்கு ஏற்படுமேயானுல் ஒரு சிப்பாயால் உபயோகமுண்டா இல்லையா என்றும், அவனுல் பாகிஸ்தானை எதிர்க்கமுடியுமா என்றும் 'ரைபிள் கிளப்'புகளெல்லாம் என்ன ஆவது என்பனபோன்றதுமான விஷயங்கள் மிகவும் அற்பமாகவே நமக்குப்படும். அவற்றைப்பற்றிச் சிந்திக்கும் அவசியமே நமக்கு ஏற்படாது.

உலகத்தவர்களை அழைக்கிருேம்

இன்று செய்த தீர்மானத்தின்படி வருகிற இரண்டு வருஷங்களுக்கு நமது எல்லாவேலைகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு பூமிதான விஷயத்தில் முழுமூச்சுடன் ஈடுபடவேண்டும் என்று ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் ஞாபகப்படுத்தியபடி, குறிப்பிட்ட தேதியிலிருந்து சிறிது காலம் வேலை செய்வது பின்பு அசிரத்தையாயிருந்து விடுவது என்பதல்ல என்

கருத்து. நம்மை அவர் எச்சரிக்கை செய்திருக்கிறார். இரண்டு வருஷம் வேலை செய்யவேண்டும் என்று தீர்மானம் எழுதியவர்கள் நன்றாக யோசித்துத்தான் செய்தார்கள் என்பதல்ல; 1957-ம் வருஷம் வரையிலும் நாம் வேலை செய்வதாக இருந்தோம், அதற்கு இன்னும் இரண்டு வருஷங்கள் பாக்கியிருக்கின்றன, அந்த இரண்டு வருஷங்கள் வேலை செய்யவேண்டும் என்று அவர்கள் கேட்டிருக்கலாம். இந்த இரண்டு வருஷங்கள் சர்வோதய சமாஜ அங்கத்தினர்கள் மட்டும் முழு மூச்சுடன் வேலை செய்யவேண்டும் என்பதல்லாமல் உலகத்தவர்களையும் இந்த வேலை செய்ய அழைக்கிறோம். இந்த அழைப்பு உலக முழுவதிலும் உள்ளவர்களுக்காகும். கஷ்டப்பட்டு உழைத்து 1957-க்குள் தண்ட சக்தியில்லாத சமூகத்தை ஸ்தாபிக்கவேண்டும்.

இரண்டு வருஷங்களில் மனிதசமூகம் விடுதலையடையப் போகிறது

சில அன்பர்கள் சம்மேளனத்திற்கு நடந்து வந்து திரும்பும்போது ரயிலில் செல்கிறார்கள் என்றும் மற்றும் சிலர் வரும்போதும் திரும்பும்போதும் கால்நடையாகவே செல்கிறார்கள் என்றும் ஸ்ரீ வல்லபஸ்வாமி சொன்னார். மேலும் ஒரே தடவை கால்நடை யாத்திரை செய்வதென்றால் திரும்பிப் போகும்போதும் அத்திட்டத்தை நிறைவேற்றலாம் என்று அவர் கூறினார். அவர் ஏன் அப்படிக் கேட்டுக்கொண்டார் என்று நானும் சிந்தித்துப்பார்த்தேன். இங்கு நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய செய்தியை நாம் உடனடியாக மக்களிடம் பிரசாரம் செய்யவேண்டும். இங்கிருந்தே கால்நடையாகப் புறப்பட்டால் இரண்டு வருஷங்களுக்குள் மனிதசமூகம் விடுதலையடையப்போகிறதென்றும் அதற்கான பணியில் நாம் ஈடுபடவேண்டுமென்றும் கிராமம் கிராமமாக நாம் பிரசாரம் செய்துகொண்டே போகமுடியும். எங்கெல்லாம் இவ்விதமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதோ அங்கு பொதுமக்கள் விடுதலை மிகவும் சமீபத்தில் இருக்கிறது என்று எண்ணி வேலை செய்து வந்திருக்கிறார்கள். இந்த

எண்ணம் உண்டான பிறகுதான் சீர்திருத்தங்களும் முன்னேற்றங்களும் நடந்திருக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

நீங்கள் அளிக்கும் தானம் உலக சமாதானத்திற்குத் தான்

இரண்டு வருஷங்களுக்குள் முயற்சிசெய்து கொஞ்சம் நிலதானம் பெறுவது என்பதுமட்டுமல்ல. உலகத்திலுள்ள சகல கோட்பாடுகளையும் மதிப்பற்றதாகச் செய்யக்கூடிய வகையில் தீவிர முயற்சிசெய்து ஒரு புதிய சமூகத்தை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். தற்காலத்தில் இது நடைபெற முடியாது என்று எவரும் அதைரியப்படவேண்டியதில்லை. முன்பு நூறு இருநூறு வருஷங்களில் செய்யக்கூடிய காரியத்தை இப்போது ஒரு வருஷத்தில் செய்து முடிக்கலாம். எனவே இரண்டு வருஷங்களுக்குள் இந்த மகத்தான சாதனையை செய்து முடிப்பது அசாத்தியம் என்று நினைக்கவேண்டியதில்லை. இந்தத் தீவிரமான நம்பிக்கையால் உந்தப்பட்டு நீங்கள் திரும்பவேண்டும். பூமிதானம் கேட்கும்போதெல்லாம் "நீங்கள் அளிக்கும் தானம் உலக சமாதானத்திற்குத்தான்" என்று அன்பர்களிடம் சொல்லவேண்டும். உங்களுக்கு உலக அமைதி வேண்டுமா? அப்படியானால் நமது தேசத்தின் நிலப்பிரச்னையைத் தீர்ப்பதற்காக நிலதானமும் சம்பத்து தானமும் கொடுத்து அவரவர் பங்கை நிறைவேற்றுங்கள்.

உலக அமைதிக்கு ஒரு ஓட்

நீங்கள் அளிக்கும் ஆறிலொருபங்கு உலக அமைதிக்கு ஒரு வோட் ஆகும். இதே பாவனையுடன் இந்த வேலையை நாம் செய்வோமானால் இதிலுள்ள சக்தி நமக்கு விளங்கும். சில சந்தேகவாதிகள் நாம் செய்யக்கூடிய இந்த முறையிலேயே நிலப்பிரச்னையை 1957-க்குள் தீர்க்கமுடியுமா என்று ஐயுறுகிறார்கள். வேறுவழி வேண்டும் என்கிறார்கள். நாம்

முறைகளுக்காக விசேஷ மதிப்புக்கொடுப்பதில்லை. எவ்வளவு சிரத்தையுடன் இதில் ஈடுபடுகிறோம் என்பதுதான் கவனிக்கவேண்டிய விஷயம். நமது மனப்பான்மையிலும் சிரத்தையிலும் குறைவு ஏற்பட்டால் இதைக்காட்டிலும் சிறந்த முறையினால்கூட நிலப்பிரச்னையை நாம் தீர்க்க வியலாது. இந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டால் அத்துடன் கூடவே அதிகாரத்தினின்றும் ஆட்சியினின்றும்விடுபடவேண்டும் என்ற கருத்து மக்களுக்கு ஏற்பட்டுவிடும். இந்த நிச்சயம் ஏற்பட்டால் அந்தப் பிரச்னையும் அஹிம்சையின் மூலந்தான் தீர்க்கப்படவேண்டும்.

சிந்தனை, சொல், செயல்களில்

இன்று ஸ்ரீ பாடில் அவர்களும் மற்றும் சிலரும் "ஒவ்வொருவரும் தங்கள் நிலத்தில் ஆறிலொரு பங்கைக் கொடுத்துவிடுவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?" என்று கேட்கிறார்கள். இந்தக் கேள்வி எழக் காரணமென்ன? நம்முடைய பார்வை குறுகியிருப்பதால்தான் இவ்விதமான கேள்வி எழுகிறது. பரந்த நோக்குடனும் மனப்பூர்வமான எண்ணத்துடனும் பொது மக்களை அணுகுவோமேயானால் இந்தியாவின் நிலப் பிரச்னையைத் தீர்ப்பது என்ற ஒரு சிறிய விஷயம் மட்டுமோ, அல்லது சிலருக்கு நிலம் கொடுத்து அவர்களுடைய நிலப் பசியைத் தீர்த்து அவர்களுக்கு சிறிது சாந்தியை ஏற்படுத்துவது மட்டுமோ நமது நோக்கமல்ல என்பது தெரியவரும். ஹிந்துஸ்தானத்தின் ஆத்மீக சக்தியை வளர்த்து அதன் பயனாக உலக சாந்தியை நிறுவுவது என்பதுதான் மிக முக்கியமான நோக்கம். இந்த விஷயத்தைப் புரிந்துகொள்ளும்பொழுது நமது முறைகளில் ஏதாவது குறைபாடுகள் தோன்றுமேயானால் அவைகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டும். இதில் சிந்தனை, சொல், செயல்களில் குறைபாடுகள் இருக்கலாம். இதன் காரணமாக நமது செயலுக்கு முழு சக்தியும் ஏற்படவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

தீவிர சத்தியாக்ரகம் செய்வோம்

நாம் இப்பொழுது சத்தியாக்ரகத்தைப் பற்றி யோசிக்கிருேமாகையால் சத்தியாக்ரக சாஸ்திரத்தை உங்கள்முன் வைக்கிறேன். சத்தியாக்ரகத்தைப் பற்றி நினைப்பவர்கள், மனிதன் சிறிய ஹிம்ஸையிலிருந்து படிப்படியாக ஹிம்ஸையை அதிகப்படுத்திக்கொண்டே சென்று பயங்கர ஹிம்ஸை வரை சென்றிருக்கிருன் என்று நினைக்கிருர்கள். முதலில் அடக்கமாக சத்தியாக்ரகம் செய்வோம் என்று நினைக்கிருர்கள். இன்று நடைபெறும் நமது கால் நடை யாத்திரையும் ஒரு சத்தியாக்ரகம் என்று நாம் சொல்லுகிருேம். ஜனங்கள் "ஆம், இது ஒரு எளிய சத்தியாக்ரகம் தான். இதனுல் நமது வேலை சரிவர நடைபெறவில்லையென்ருல் தீவிர சத்தியாக்ரகம் செய்வோம். அதிலும் பயனில்லை என்ருல் இன்னும் தீவிரமாக்குவோம். இப்படியே தீவிரத் தன்மையை அதிகரித்துக்கொண்டே போவோம்" என்று சொல்கிருர்கள். ஆனுல் உண்மையில் நம்முடைய சிந்தனையெல்லாம் இதற்கு மாருக இருக்க வேண்டும். நாம் ஆரம்பித்த அடக்கமான சத்தியாக்ரகத்தினுல் பயனில்லை. மேலும் அடக்கமானதும், எளியதுமான முறையைப் பின்பற்றவேண்டும். ஹோமியோபதி வைத்திய முறையில் மருந்தின் அளவைக் குறைத்துக் கொண்டே போனுலும் அதை நன்ருக அரைப்பது மூலம் அதன் சக்தியை அதிகரிக்கச் செய்துகொண்டே போகிருர்கள். கருத்து உண்மையாக இருந்தால் அது எவ்வளவு நுண்ணியதாக இருந்தாலும் அதனுல் ஏற்படக்கூடிய பலன் பன்மடங்காகவே இருக்கிறது. ஹிம்சை முறையில் இம்மாதிரி அல்ல. அதற்கு நேர்மாருக நமது முறை இருக்கிறது. நாம் சரியான பலனை அடையவில்லை என்ருல் நம்முடைய அடக்கத்தில்தான் ஏதோ குறை இருக்கிறது. அதை நிவர்த்தி செய்வதற்கான வழிகளை நாம் மேற்கொள்ளவேண்டும். இதுதான் சத்தியாக்ரகத்தினுடைய உண்மை இலக்கணம். சுதந்திரத்திற்காக நாம் நடத்திய

சத்தியாக்ரகத்தில் ஒரு நிர்ப்பந்தத்தைப் புகுத்தி ஆங்கிலேய அரசாட்சியை அகற்றினேம். அது எதிர் மறை முறையாக இருந்தது. அச்சமயத்தில் நமது தேசம் நிராயுதபாணியாகவும் நம்பிக்கை யிழந்ததாகவு மிருந்தது.

சத்தியாக்ரக முறைகள் சூட்சமமடைய வேண்டும்

அன்று ஆங்காங்கு ஒரு சிலர் பிரமைதட்டினவர் போல் இங்குமங்கும் பலதரப்பட்ட தாக்குதல்களும், கொலைகளும் புரிந்துவரத் தொடங்கியிருந்தனர். கட்டுக்கடங்காத பலாத்காரத்தை ஆயுதமாகக் கொள்ளவேண்டுமென்று முனைந்தனர். இல்லையாயின் நம்பிக்கை யிழந்து மூலைமுடுக்குகளில் கைகட்டிக்கொண்டு சும்மா இருந்தனர். அந்த சமயத்தில்தான் இந்த அஹிம்ஸை முறை தோன்றியது. மக்கள் அதை தங்களால் பின்பற்ற முடிந்த அளவு பின்பற்றினர்கள். ஆகையால் அந்நாட்களில் நடந்தேறிய ஒரு விதமான சத்தியாக்ரகம் அது, பரிபூரணமானதென்று கொள்ளலாகாது. அது ஒரு விசேஷ சூழ்நிலையில் — ஒரு விசேஷ முறையில் — நடைபெற்றது என்றுதான் கருத வேண்டும். இன்றைய ஜனநாயக நிலையைப் பார்த்து இன்று உலகில் செய்யப்பட்டுவரும் வெவ்வேறு சக்திகளை நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால் நாம், நமது சத்தியாக்ரக முறைகளை மேன்மேலும் சூட்சமமாக்கிக்கொண்டே போக வேண்டும் என்பது புலனுகும். மெதுவாக ஆரம்பித்து மேலும் அதிகம் மெதுவாக்கி, மிக மிக மெதுவாக்கிக் கொண்டே போவோமானுல், சத்தியாக்ரகம் மிகவும் பயனளிக்கவல்லதாகவும், சக்திமிக்கதாகவும் பரிணமிக்கும் என்பதில் ஐயமில்லை. துளசி ராமாயணத்தில் சுரஸா என்ற ராக்ஷஸியின் கதை இருக்கிறது.

உருவைப் பெருக்குவதால் பயனில்லை

“சுரஸா என்ற பெயருடைய நாக மாது அனுமானுக்கு எதிரில் தோன்றினுள். அவள் தனது வாயை ஒரு யோஜனை அகலமாக விரித்தபொழுது, அனுமார் தனது

உருவத்தை இரண்டு யோஜனை பெரிதாக்கிக்கொண்டார். அவள் தனது வாயை இரண்டு யோஜனை அகலப் பிளந்த பொழுது, அனுமார் நான்கு யோஜனை பெரிதாகத் தன்னை பெருக்கினர். அவர் நான்கு யோசனை அளவு பெருத்த பொழுது! சுரஸா தனது வாயை எட்டு யோஜனை பெரிதாக்கினள். அப்பொழுது அனுமார் பதினறு யோஜனை பெரிதாகிவிட்டார். அப்பொழுது சுரஸா வாயை 32 யோஜனை பிளந்து பயங்கரமானபொழுது அனுமாருக்கு "இப்படி உருவைப் பெருக்குவதால் பயனில்லை" என்று தோன்றிற்று. 32ஐ 64 ஆகவும் 64ஐ 128 ஆகவும் பெருக்குவதினல் பயனில்லை. இதற்கு முடிவில்லை. இது அணு ஆயுதம் வரை கொண்டு செல்லும். இதில் எவ்வித பயனுமில்லை என்று எண்ணி அனுமார் மிகவும் நுண்ணிய உருவெடுத்து சுரசையின் வாயினுள் பிரவேசித்து, மூக்கு வழியாக வெளியே வந்துவிட்டார். பிரச்னையும் தீர்ந்து விட்டது.

நுண்ணுருவம்கொண்டு பிரச்னைகளைத் தீர்க்கவேண்டும்

இந்தக் கதையிலிருந்து நாம் தெளிவுபெறவேண்டியது யாதெனில், "அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு என்று அணு ஆயுதங்களின் உருவத்தில் நம் எதிரில் தோன்றியிருக்கும் பயங்கர சுரசைகளை வெல்ல நாம் மிகவும் நுண்ணுருவம் பூண்டு பிரச்னைகளைத் தீர்க்கவேண்டும்" என்றே.

இதனல்தான் நமக்கு மனதில் எழுச்சி ஏற்படுகிறது. குஜராத்தைசேர்ந்த ஒரு நண்பர் தற்சமயம் அங்கு வேலை மந்தமாக செல்கிறது என்று கூறினர். நான் சொன்னேன். "மந்தமடையவில்லை — நீ வெளியிலிருந்து பார்க்கிறாய். உள்ளிருந்து பார்க்கவில்லை," என்று கூறினேன். "உன் நெஞ்சில் கைவைத்துப் பார். உனது இருதயத் துடிப்பு மந்தமடைந்துள்ளதா பார்!"

கடவுள் ஒரு சோதனைக்குள்ளாக்கினர்

நாம் நெஞ்சில் கைவைத்துப் பார்த்தால் உற்சாகம் குறைவில்லை என்பதை காணலாம். பாபாவுக்கு (வினேபா)

உற்சாகம்தான் எங்கும் காண்கிறது. பாபா கால் நடை யாத்திரை செய்யும்பொழுது வயிற்றில் வலி யிருந்து வந்தது. நான் இதைப் பற்றி நீண்ட கதை சொல்லப் போவதில்லை. காலை முதல் மாலை வரை வயிறு வலித்து வந்தது. ஆரம்ப நாட்களில் இரவு தூக்கம் வந்துகொண்டிருந்தது. சமீப காலத்தில் வயிற்று வலி காரணமாக தூக்கமும் சரிவர இல்லை. இதில் காலின் குற்றம் யாது? ஆகையால் கால் நடை யாத்திரையைத் தொடர்ந்து நடத்தினேன். நண்பர்கள் மிகவும் வற்புறுத்திய பொழுது மூன்று நாட்கள் மொத்தம் சுமார் 7, 8 மைல் தூரத்திற்கு பல்லக்கில் உட்கார்ந்து சென்றேன். ஆயினும் தினந்தோறும் ஐந்து, ஆறு மைல் கால் நடையாக நடந்துதான் வந்தேன். கடைசியில் அந்த வயிற்று வலி நின்றுவிட்டது. இது ஒரு கருத்தின் விசேஷம். கடவுள் என்னை ஒரு சிறு சோதனைக்கு உள்ளாக்கினர்! எனது கால்களை முறிக்காததுவரை இறைவன் எனது யாத்திரையை நிறுத்தவேண்டும் என்று எண்ணவில்லை என்று நான் எண்ணலானேன். இதில் கடவுள் வழிகாட்டியுள்ளார். அவர் செய்திருக்கிறது. இதை நான் புரிந்துகொண்டேன். சென்ற ஆண்டைவிட இவ்வருடம் மூன்று நான்கு லட்சம் ஏக்கர் நிலம் குறைவாகத்தான் கிடைத்திருக்கிறது என்றெல்லாம் கூறுகிறார்கள். அது ஒரு பெரிய விஷயமில்லை. இதைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் இருதயத்தில் தீவிரமான மனோவேகத்துடன் செல்லுங்கள். நான் உங்களிடம் வேண்டுவது இதுவே.

உத்திரவிட்டு வேலைவாங்க முடியாது

இன்று சர்வ சேவா சங்கம் உங்கள் முன் சமர்ப்பணம் செய்த தீர்மானத்தை பார்த்தீர்கள். இம்மாதிரி எல்லா ஊழியர்களுக்கும் யோசனை கூற சர்வ சேவா சங்கத்திற்கு என்ன உரிமை இருக்கிறது? ஆனால் சர்வ சேவா சங்கம் உங்களுக்கு உத்தரவு இட அதிகாரமற்ற ஸ்தாபனமாதலால் அது கட்டளையிடவில்லை. சர்வ சேவா சங்கம் உங்

களிடம் தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளலாமே தவிர உங்களுக்கு உத்தரவு பிறப்பிக்க முடியாது. எல்லோரும் இல்லையாயின் பிரார்த்தனை செய்ய முடியாது. எல்லோருக்குமாகத்தான் வேண்டுகோள் விடுக்கலாம். ஆகையால் இன்றைய தீர்மானம் மிகவும் அடக்கத்துடன் கூடியது. தங்கள் ஊழியர்களையே உத்தரவு இடும் அளவு அது பலமிக்கதாகி விடவில்லை. ஒரு பெரிய முதலாளி தனது வேலையாட்களுக்கு உத்தரவு பிறப்பித்து அதன்படி வேலை வாங்குவதுபோல், சர்வ சேவா சங்கம் செய்ய முடியாது. ஆகையால் அந்தத் தீர்மானத்தில் அகில உலகத்தையும் இரண்டு வருட காலத்திற்கு தீவிரமாக முயற்சிக்கும்படி வேண்டப்பட்டிருக்கிறது. இந்த இரண்டாண்டுகளுக்குள் நமது சமுதாயத்தை ஆட்சி, அதிகாரங்களுக்கப்பாற்பட்டதாக்குவதற்கு முயலும்படி வேண்டப்பட்டிருக்கிறது. நமது சமுதாயத்தை ஆட்சி, அதிகாரங்களுக்கப்பாற்பட்டதாக்கும் பொழுதுதான், நமது அஹிம்சையில் பிரவேசிக்க முடியும். இதற்கு மாறாக ஹிம்சையின் எல்லைகளை வரையறுத்து. கட்டுப்படுத்தி ஹிம்சையின் தேவைக்கதிகமான ஆயுதங்களை மட்டும் கட்டுப்படுத்துதல் என்பது நடைமுறையில் பொருத்தமில்லாத விஷயமாகும். ஆகையால் நாம் அனைவரும், உலக நன்மைக்காக, அகில உலக நலனுக்காக, பேசுவதாகவே நாம் இந்தத் தீர்மானத்தை கருதவேண்டும்.

பூத தயை — விசாலமான அர்த்தமுள்ள வார்த்தை

குஷ்டரோக நிவாரண சங்கத்தின் ஒரு புத்தக வெளியீட்டிற்காக முடிவுரை எழுதும்பொருட்டு நமது முன்னோர்கள் நமக்கு என்ன கற்பித்தார்கள் என்று நான் சிந்தனை செய்தேன். நான் முகவுரையில் மனிதத்தத்துவத்தின் (Humanity) வளர்ச்சி கிருஸ்துவ மதத்தினால் ஏற்பட்டது என்றும், அதனால்தான் அங்கு குஷ்டரோகிகளுக்குப் பணிவிடை செய்வது போன்ற காரியங்கள் நடை

பெறுகின்றன என்றெல்லாம் எழுதினேன். அன்று மனிதத்துவம் (Humanity) என்ற வார்த்தைக்கு மொழிபெயர்ப்பு எனக்கு மிகவும் கடினமாக தோன்றியது. ஏனெனில் எனது பாஷையில் 'ஹ்யுமானிடி' என்ற வார்த்தையே கிடையாது. இருக்கும் வார்த்தை "பூத தயை" அல்லது 'உயிர்க்கருணை' என்ற வார்த்தைகளே. ஆனால் இங்கு நமக்கு தேவையான வார்த்தையோ "மனித காருண்யம்." நாம் இப்பொழுது "மானிட இரக்கம்" போன்ற எந்த வார்த்தையையும் புதிதாக உண்டாக்கவில்லை, நான் "பூத தயை" என்ற வார்த்தையையே மேற்கொண்டுள்ளேன். "சராசரங்களுக்கெல்லாம் நலம் பிறக்குமாக" என்றே நாம் இன்று கூறுகிறோம். இவ்வளவு விசாலமான ஒரு வார்த்தை நம்முன் இருப்பதைக் காட்டிலும் அதிகம் விரிவான வார்த்தை இருக்கவே முடியாது. சர்வம் (எல்லாம்) என்று சொன்னோம். "பூதம்" என்றோம். சராசரங்கள் யாவும் என்றோம்!, நன்மை என்று சொன்னோம். இதை விட சொல்வதற்கு பாக்கி என்ன இருக்கிறது! மனிதன் எவ்வளவு உயர்ந்த நோக்கங்களை அடைவதற்காகத் துள்ளி எழ முடியுமோ, அவ்வளவு உயர்ந்த லட்சியங்களை இவ் வார்த்தைகள் குறிப்பிட்டுவிட்டன. சர்வ சராசரங்களின் நலன் என்பதற்குப் பொருள் கூறும்பொழுது ஸ்ரீ பகவான் ஸ்ரீ சங்கரர் "அஹிம்சை" தான் வழி என்று ஒரு வார்த்தையிலேயே கூறிவிட்டார். "நலம் செய்வோம்" என்ற இரு வார்த்தைகளுடன்தான் நாம் இந்த சர்வோதய சம்மேளனத்தை விட்டுப் புறப்படுகிறோம். நிலப் பிரச்னையைத் தீர்ப்பது மட்டும் நமது நோக்கமாகாது. உலகிலிருந்தே ஆட்சி அதிகாரம் மறையவேண்டும். ஏனெனில் இந்த ஆட்சி அதிகாரத்தால் ஹிம்ஸை, பலாத்காரத்தை மட்டுப் படுத்துவதில் வெற்றி பெறுது. **இம்மாதிரியான ஆட்சி, அதிகாரத்தை ஒழிப்பதற்காகவும், அதன் பயனாக உலகில் அஹிம்ஸையை நிலைநாட்டுவதற்காகவும் உலகில் சாந்தி நிலவச்செய்வதற்கும் நான் உங்களிடம் தானம் கேட்கிறேன்.**

உலக சாந்திக்காக நீங்கள் உங்கள் சொந்த நிலத்தில் ஆறில் ஒரு பகுதியைக் கொடுக்கமாட்டீர்களா? கையிலுள்ள செல்வத்தில் ஆறில் ஒரு பகுதி கொடுக்கமாட்டீர்களா?

நமக்கு இதைத்தான் மக்கள் உணரும்படி செய்ய வேண்டும்.

அன்றும் இன்றும்

சகோதரர்களே நான் உங்கள் நேரத்தில் அதிகமாக வீணுக்க விரும்பவில்லை. பல கேள்விகள் கேட்கப்பட்டன. ஆனல் சுருக்கமாக என்மனதில் எழுந்த எண்ணங்களை தெரிவித்தேன். நமது பல சகோதரர்கள் நல்ல நல்ல வேலைகளில் ஈடுபட்டிருக்கிருர்கள். நான் அவர்களிடம் சில அன்பு மொழிகளைக் கூற விரும்புகிறேன். நான் சில உறுதியான நம்பிக்கைகள் கொண்டுள்ளேன். நாம் எவ்வளவு முழுமனதுடன் நிர்மாண வேலைகளைச் செய்து வந்தோமோ, அதைக் காட்டிலும் அதிக உறுதியுடன் நிர்மாண வேலைகளை செய்ய முடியாது என்று கூறலாம். அதைக் காட்டிலும் அதிக உறுதிப்பாடு நமக்குக் கிடைப்பதரிது. நாம் சிறு, சிறு நிர்மாண வேலைகள் முப்பது, முப்பத்திரண்டு ஆண்டுகளாக மிகவும் சிரத்தையுடன் செய்து வந்தோம். காந்தியடிகள் உயிர் வாழ்ந்திருந்தாராயின் இன்றும் அதே சிறு சிறு நிர்மாணத்திட்ட வேலைகள் நீடித்து நடந்து கொண்டிருக்கும் என்றும் எனது அந்தராத்மா கூறுகிறது. அவைகளால் நாம் பெற்றுவந்த திருப்தி சிறிதன்று. அவைகளால் நமக்கு பரந்த திருப்தி ஏற்பட்டுவந்தது. அப்பொழுது நம் முன் யாராகிலும் வந்தால் அவர்களைப் பொருட்படுத்துவது கூட இல்லை. அன்று நம்மைப் பார்த்து பலர் "இவர்கள் யார், மூர்க்க மனிதர்களாக தென்படுகிருர்கள். பார்த்தால் கூட பார்க்காததுபோல் செல்கிருர்கள்" என்று கூறி வந்தனர். அம்மாதிரி இருந்த அதே நான்தான் இன்று உங்கள் முன் உட்கார்ந்துகொண்டு நீங்கள் செய்துவரும் சேவையை

இரண்டாண்டுகளுக்கு கொஞ்சம் நிறுத்திவிட்டு வாருங்கள் என்று வேண்டுகிறேன்!!

இதனால் அந்த வேலைகளுக்கு எவ்வித நஷ்டமும் ஏற்படாது. தேசத்திற்கும், உலகிற்கும் அதனால் எவ்வித நஷ்டமுமேற்படாது. ஏனெனில் சிறிது நாட்களில் நமக்கு இவ்வியக்கம் மூலம் கிடைக்கக்கூடிய வேலைகளை செய்வதற்கு நாம் போதாதவாறு செய்யுமளவுக்கு அவை வளரக்கூடும்.

கணந்தோறும் இதே வேலையில் ஈடுபட்டிருப்போம்.

நிர்மாணத் திட்ட வேலைகளில் மிகவும் அன்புடனும், சிரத்தையுடனும் ஈடுபட்டிருக்கும் நிர்மாண திட்ட ஸ்தாபன ஊழியர்கள், இந்த இயக்கத்திற்காக தாங்கள் செய்துவரும் நிர்மாணத் திட்ட வேலைகளை இரண்டாண்டுகளுக்கு முற்றிலும் விட்டுவிடுவார்களானால்கூட எவ்வித நஷ்டமும் ஏற்படாது என்று அவர்களுக்கு நான் நம்பிக்கையூட்ட விரும்புகிறேன். அந்த வேலைகளுக்கும் எவ்வித நஷ்டமும் ஏற்படாது. நம் அனைவருக்கும்கூட எவ்வித நஷ்டமும் ஏற்படாது. இதைவிட அதிக நேரம் நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அடுத்த சம்மேளனத்தில் சந்திப்போம். அதுவரை நிரந்தரமாக கணம்தோறும் இதே வேலையில் ஈடுபட்டிருப்போம்.

— **விநோபா**

கிராமோதயம்

நீங்கள் கிராமோதயம் படித்தீர்களா?

- அஹிம்சைப் புரட்சி வீரர் விநோபா பாவேயின் கட்டுரைகளை உடனுக்குடன் வெளியிடும் வாரப் பத்திரிகை.

- பூமிதான யக்ஞம் மூலம் கிராமக் கைத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட அஹிம்சைப் புரட்சியின் வாராந்திர செய்தித்தாள்.

- மிக அதிகமான தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் காந்தீய நிர்மாணத் திட்ட தமிழ் பத்திரிகை.

விபரங்களுக்கு:

"கிராமோதயம்"
காந்திநகர், திருப்பூர்.

என்ற விலாசத்திற்கு எழுதவும்.

அல்லது சமீபத்திலுள்ள சர்வ சேவா சங்கக் காரியாலயத்தில் விசாரிக்கவும்.

வருட சந்தா ரூ. 3 அரை வருட சந்தா ரூ. 1-8-0
தனிப்பிரதி ஒரு அணு.

கமலா மின் அச்சகம், திருப்பூர்.